திருமலை திருப்பதி தேவஸ்தானம்

# பால ஸப்தகிரி

சமய மாத இதழ்

**டிசம்பர் 2020**

ஸப்தகிரி இலவச இணைப்பு







திருமலை திருப்பதி தேவஸ்தானம்

# பால ஸப்தகிரி



ஸப்தகிரி இலவச இணைப்பு

டிசம்பர் 2020

மலர் – 01 இதழ் – 10

உள்ளுறை பக்கம்

**இந்துக்கடவுள்கள் : ஸ்ரீராமபக்த அனுமான்** 32
*- திருமதி பிரேமா வரதன், புதுதில்லி.*

**பன்னிரு ஆழ்வார்கள் : தொண்டரடிப்பொடியாழ்வார்** 34
*- திரு. ஸ்ரீரங்கராஜ ராமானுஜதாசர், சேலம்.*

**கன்னட ஹரிதாஸர்கள் : ஸ்ரீமத்மத்வாச்சாரியார்** 36
*- திருமதி ராஜலக்ஷ்மி, கேரளா.*

**சித்திரக்கதை : பக்த பிரகலாதன்** 38
*கதை மூலம் : திருமதி சி.எச். தீபாஸ்ரீ*
*தமிழாக்கம் : திரு. வ.ஓ. சுரேஷ்*
*சித்திரம் : திரு. பி. துளசிபிரசாத்*

**நீதிக்கதைகள் : கடவுள் துணை** 42
*- திரு. ராமநாதன், சேலம்.*

**சிறந்த சிறுவன் : செல்வன் கா. அச்யுத் சர்மா** 44

**புதிர் : வினா–விடை** 45
*திரு. என். பாலசுப்பிரமணியன், திருவள்ளூர்.*

**சித்திரம் வரைதல்** 46

முன்னட்டை : ஸ்ரீகோதை நாச்சியார்
பின்னட்டை : ஸ்ரீசீதாராமரை துதிக்கும் அனுமன்

பகவான் விஷ்ணுவிற்கு ஆயிரம் திருநாமங்கள் உண்டு. அதில் மிகவும் உயர்ந்த திருநாமம் ராம நாமமே ஆகும்.

ஸ்ரீராம மந்திரத்தையே தாரகமாகக் கொண்டு, இராமனோடு வைகுந்தம் செல்ல மறுத்து, இப்பூவுலகிலேயே சிரஞ்சீவியாக நம் அஞ்ஞான இருளைப் போக்கும் அநுமனைச் சிறிது அனுபவிப்போம் வாரீர்! ஆற்றல், அறிவு, சீலம், பக்தி, வெற்றி, வீரம் என்று எல்லா வித குணநலன்களும் பெற்ற வாயு குமாரனான ஆஞ்சநேயர், யாவற்றுக்கும் சிகரமாக அடக்கமே உருவானவர்.

ஆஞ்சனேயனுடைய பராக்கிரமம் அபரிமிதம். இதை பகவான் ஸ்ரீராமனே கொண்டாடுகிறார். துளஸீ தாசர் (ஹனுமான் சாலீஸா), அனுமனைப் பார்த்துக் கேட்கிறார், அசோக வனத்தில், மிகச்சிறிய வடிவாய் பணிவுடன் சீதா தேவியின் முன் நின்ற நீ மிகவும் பயங்கரமான விஷ்வரூப வடிவெடுத்து இலங்கையை எரித்தது எங்ஙனம்? எல்லாம் ராம நாம மகிமையாலன்றோ!

சூரிய பகவானிடம் அனைத்துக் கலைகளையும் கற்றுத் தேர்ந்தவர் அனுமன். அனுமனின் பேச்சை ஆச்சர்யமாகக் கேட்கிறார் ஸ்ரீராமன். கேட்டு விட்டுச்



# ஸ்ரீராம பக்த அனுமான்

திருமதி பிரேமா வரதன்,
புதுதில்லி.





சொல்கிறான். ரிக், யஜுர், சாம, அதர்வணம் என்று இந்நான்கு வேதங்களைக் கற்றாலன்றி, இவ்வளவு அழகாகப் பேசவே முடியாது. வ்யாகரணமும் அறிந்திருக்கும் இவன் நவவியாகரண பண்டிதனே! என்றெல்லாம் கொண்டாடுகிறார் ராமன். ஒரு இடத்தில் கூட அபசப்தமேயில்லாமல் இவ்வளவு அழகாகப் பேசும் இவனல்லவோ சொல்லின் செல்வன்! என்று கொண்டாடுகிறார்.

ராவணனை வதம் செய்த பிற்பாடு, ஸ்ரீராமர் புஷ்பக விமானத்தில் அயோத்திக்கு வரும் வழியில் பரத்வாஜ ஆசிரமத்தில் இளைப்பாறுகிறார். தன்னையே எதிர்பார்க்கும் பரதனிடம், தம் வருகையைத் தெரிவிக்க அனுமனை அனுப்புகிறார். பரதனிடம் செய்தி சொன்ன அனுமன் ஸ்ரீராமரிடம் வருகிறான். அச்சமயம் அனுமனுக்காக இலையை மறுபடியும் தனியே வருவிக்க வேண்டாதபடி, ராமன் அனுமனை தனது எதிரில், தன் இலையிலேயே ஒரு பகுதியில் உண்ணும்படி நியமிக்க, பெருமாள் சொன்ன படியே கேட்டு அனுமன் சில பழங்களை ஸஹ போஜனம் செய்தான் என்று வரலாறு.

முன்பொரு காலத்தில் வாழை இலை, தாமரை இலையைப் போன்று இடை நரம்பு இல்லாமல் தான் இருந்ததாம். அப்பொழுது இராமன் அனுமனைத் தன் எதிரில் அமர்த்தி வைத்துத் தனது இலையின் ஒரு பாதியில் அநுமனை உண்ணுமாறு பணித்தார். அப்பொழுது ஒரு வரையறைக்காக இராமன் இலையின் நடுவில் தனது திருக்கையினால் கீறினாராம். அந்நாள் தொடங்கியே அவர் சங்கல்பத்தினால் வாழை இலையில் இடை நரம்பு தோன்றிற்றாம்.

# தொண்டரடிப்பொடியாழ்வார்

ஒரு சமயம் சிறுவன் கோபி அவனது தாத்தா பாட்டியுடன் கும்பகோணம் சென்றிருந்தான். மார்கழி மாதம் கேட்டை நட்சத்திரத்தன்று திருவைக்காவூர் செல்லும் வழியில் திருமண்டங்குடி என்ற ஊரில் உள்ள பழமையான ஆதி திருவரங்கம் கோயிலுக்கு அனைவரும் சென்றனர். அப்பொழுது இந்த கோயிலில் என்ன விசேஷம் என கோபி தெரிந்து கொள்ள விரும்பினான்.

கோபி : தாத்தா ஒவ்வொரு ஆண்டும் இதே நாளில் இந்த கோயிலுக்கு வருவதன் விசேஷம் என்ன?

தாத்தா : கோபி! இன்று தொண்டரடிப்பொடியாழ்வாரின் ஜென்ம நட்சத்திரம். மேலும், இது ஆழ்வார் பிறந்த ஊர் என்பதால் அவருக்கு விசேஷ பூஜைகள் இங்கு செய்வார்கள்.

கோபி. தாத்தா! இந்த கோயிலில் திரு அரங்கப் பெருமான் நின்ற கோலத்தில் உள்ளாரே!

தாத்தா : ஆம் கோபி! நான்கு திருக்கரங்கள் கொண்ட இந்த அரங்கனுக்கு பெயர் அழகிய மணவாளன். உற்சவர் பெயர் கேட்டவரம் தரும் நம்பெருமாள். தொண்டரடிப்பொடியாழ்வார் பாடிய திருப்பள்ளி எழுச்சி பாசுரங்களை கேட்பதற்காகவே திருப்பதி பாலாஜியும், திருமாலிருஞ்சோலை சுந்தரராஜ பெருமாளும் இங்கு வந்து சேவை சாதிப்பதால் தொண்டரடிப்பொடியாழ்வாரின் பாசுரம் ஏற்றம் பெற்ற சிறப்பான தலம்.





கோபி : தாத்தா! தொண்டரடிப் பொடியாழ்வார் ஸ்ரீரங்கத்தில் உள்ள பெருமாளை குறித்துதான் திருமாலை பாசுரமும் திருப்பள்ளி எழுச்சியும் பாடினார்.


தாத்தா : ஆம் கோபி! அரங்கனை பாடிய வாயால் வேறு எந்த பெருமானையும் பாடமாட்டேன் எனக் கூறியவர்தான். 45 பாசுரம் திருமாலை, 10 பாசுரம் திருப்பள்ளி எழுச்சி திருவரங்கனை பற்றி பாடினாலும், அப்பாசுரங்களில் திருவரங்கப் பெருமானே பலவித வடிவங்களில் பல்வேறு தலங்களில் இருப்பதாக கூறுகின்றார். அவரே ஆதிநாதன். அவரே அனைவருக்கும் தாய் தந்தையானவன் எனக்கூறி அருளுகின்றார்.

கோபி : திருவரங்கக்கோயிலிலும் அழகிய மணவாளப் பெருமாள் உண்டு. நம்பெருமாளும் உண்டு என்று சொல்லுகின்றார்கள். அதே பெயரில் இங்கும் பெருமாள் இருக்கின்றாரே.

தாத்தா : ஆம் கோபி! திருவரங்கத்திலேயே சேவை செய்து கொண்டிருந்த தொண்டரடிப்பொடியாழ்வாரை நீ பிறந்த ஊரிலேயே நானும் இருக்கின்றேன் எனக் கூறி காட்சி கொடுத்தவர் இக்கோயிலில் உள்ள அழகிய மணவாளப் பெருமாள். இப்பெருமாளே, விப்ர நாராயணன் என்ற பெயரில் ஆழ்வார் இருந்தபோது காப்பாற்றியவர். தவறாக இவர் மீது திருட்டுப்பட்டம் கட்டி சிறை வைத்து விட்டான் சோழ நாட்டு அரசன். அரசனது கனவிலே இந்த பெருமாளே தோன்றி ஆழ்வாரை விடுவிக்கச் செய்தார். விடுதலை பெற்ற ஆழ்வார் வாழ்க்கையில் மிகவும் விரக்தியுற்று, அரங்கனுக்கும் அரங்கனின் திருவடியார்க்கு மட்டும் சேவை செய்து வந்தார். அதனால் தான் இவருக்கு தொண்ரடிப்பொடியாழ்வார் எனப் பெயர் வந்தது.

– திரு. ஸ்ரீரங்கராஜ ராமானுஜதாசர்
சேலம்.

# ஸ்ரீமத் மத்வாச்சார்யர்



ஸ்ரீ மத்வாச்சார்யர் நாராயண பட்டரின் மகனாக உடுப்பியில் பிறந்தார். வாயு தேவனின் அவதாரமாக தர்மத்தை பரப்புவதற்காக பிறந்தார் என்று நம்பப்படுகிறது.

நாராயண பட்டர் தனது மகனுக்கு வாசுதேவர் என்று பெயரிட்டார். சிறு வயதிலிருந்தே அவர் விஷ்ணுவின் சிறந்த பக்தர். அவருக்கு மூன்று வயதாக இருந்தபோது, ஒரு நாள் அவரை வீட்டில் காணவில்லை. இதைக்கண்டு பதட்டம் அடைந்த நாராயண பட்டர் அவரைத் தேடி ஓடி அலைந்தார். பின்னர் அவர் அனந்தேஸ்வரர் கோயிலில் இறைவன் முன் நின்று காணப்பட்டார். எப்படி இங்கு வந்தாய் என்று தந்தை அவரிடம் கேட்டபோது, அவர் இந்த இறைவன் தான் என் கையைப் பிடித்து, அழைத்து வந்தார் என்று கூறினார். சிறு வயதினிலேயே தாயாருடன் சொற்பொழிவுக்கு சென்ற போது, உபந்யாசத்தில் சொன்ன கருத்துக்கள் சரியில்லை என்றும், அதன் சரியான பொருள் விளக்கத்தை கூறியதைக் கேட்டு எல்லோரும் ஆச்சர்யப்பட்டனர்.

இவருடைய குரு இவருக்கு, “ஆனந்த தீர்த்தர்” என்று பட்டம் சூட்டி தனது வாரிசாக நியமித்தார். ஆனந்த தீர்த்தர் பத்ரியாத்ரை புறப்பட்டார். அங்கு வேதவியாச முனியை சந்திக்க முற்பட்டார். அவருடைய சிஷ்யர்களை பத்ரியில் விட்டு, இவர் வேதவியாசரின் தரிசனம் பெற்றார். ஆனால் வியாசமுனி இவரை ஆசீர்வதித்து மீண்டும் உடுப்பிக்கு திரும்புமாறு கூறினார்.



உடுப்பியில் ஸ்ரீமத்வாச்சார்யர் தினமும் காலையில் கடற்கரைக்கு தியானம் செய்ய செல்வார். அவ்வாறு ஒரு நாள் துவாரகாவிலிருந்து வந்த ஒரு கப்பல் கடலில் தத்தளித்துக் கொண்டிருந்தது. உடனே மத்வாச்சாரியார், தன்னுடைய காவி துணியை கொடி போல் அசைத்தார். என்ன ஆச்சர்யம். மூழ்கவிருந்த கப்பல் கரைக்கு இழுக்கப்பட்டது. இதனால் மகிழ்ச்சி அடைந்த கப்பல் கேப்டன் பல பொருட்களை இவருக்கு பரிசுகளாக வழங்கினார்.

ஆனால், மத்வாச்சாரியார் எதையும் ஏற்க வில்லை. அந்த பரிசில் இருந்த கோபி சந்தனத்தை கேட்டார். மத்வாச்சார்யார் கோபி சந்தனத்தை மட்டும் பெற்றுக் கொண்டு கோவிலின் குளத்தில் மூழ்கினார். ஏனெனில் கோபி சந்தனம் பகவானுக்கு பிடித்தவையாகும். இறைவனின் அருளால், அந்த கோபி சந்தனத்திற்குள் ஒரு அழகிய கிருஷ்ண விக்ரகம் தென்பட்டது. மனம் மகிழ்ந்து மத்வாச்சார்யார் ஒரு அழகிய ஆலயம் அமைத்து அவ்விக்ரகத்தை பிரதிஷ்டை செய்தார்.

மத்வாச்சாரியார் விலங்குகளை கொன்று யாகம் நடத்துவதை மிகவும் கண்டித்தார். அன்பு குழந்தைகளே! பெரிய மனிதர்களின் வாழ்க்கையால் எல்லா நல்ல விஷயங்களையும் கற்று கொள்கிறோம். மத்வாச்சார்யர் எந்த வேலை செய்தாலும் அதை சிரத்தையாகவும் கடவுளுக்கு சமர்ப்பித்தும் செய்வார். “அகிம்சை” வழி நடந்து, மிகுந்த தெய்வ பக்தி கொண்டு மோக்ஷம் அடைய பகவானுக்கு தொண்டு செய்து நாம் அருளைப் பெற வேண்டும்.

**ஆங்கிலம் மூலம் : திருமதி எ. கீதா வீரராகவன்**
**தமிழாக்கம் : திருமதி ராஜலக்ஷ்மி**

சித்திரக் கதை

# பக்த பிரகலாதன்


கதை மூலம் : திருமதி சி.எச். தீபாஸ்ரீ
தமிழாக்கம் : திரு. வ.ஓ. சுரேஷ்
சித்திரம் : திரு.பி.துளசி பிரசாத்


பிரகலாதன் அசுர குலத்தில் பிறந்திருந்தாலும் விஷ்ணு பக்தியில் சிறந்து விளங்கினான். அவன் தந்தை விஷ்ணுவை வெறுப்பவனாவான். தன் சகோதரன் மரணத்திற்கு பழி தீர்க்க பிரம்மாவிடம் தவம் புரிந்து வரம் பெற காட்டிற்கு சென்றான்




அச்சமயம் தேவர்கள் அசுரர்களை தாக்கினர். நிறைமாத கர்ப்பிணியான பிரகலாதனின் தாய் லீலாவதியை இந்திரன் சிறைப் பிடித்ததை அறிந்த நாரதர் அவளைக் காப்பாற்றி தன் ஆசிரமத்திற்கு அழைத்துச் சென்றார்






ஆசிரமத்தில் நாரதரின் விஷ்ணு போதனைகளை கர்ப்பத்திலிருந்தபடியே கேட்ட பிரகலாதனுக்கு அபார விஷ்ணு பக்தி பெருகியது. பிரம்மாவிடம் வரம் பெற்ற பிறகு இரண்யகசிபு நாரதருக்கு நன்றி தெரிவித்து விட்டு லீலாவதியை ஆசிரமத்திலிருந்து அழைத்துச் சென்றார்

பிரகலாதனுக்கு ஐந்து வயதிலேயே குரு புத்திரர்களான சண்ட மார்கன் கல்வியை போதித்து அவன் தந்தையிடம் அழைத்து வந்தனர். கர்ப்பத்திலேயே ஞான அறிவை பெற்ற பிரகலாதன் அனைத்து நற்குணங்களையும் பெற்றான். மகனின் கல்வியறிவை பரிசோதிக்க எண்ணிய இரண்யகசிபு அவனின் ஹரி பக்தியை கண்டு கோபமுற்றான்.










இரண்யகசிபுவின் அறிவுரைப்படி சண்டன், அமர்கன் பிரகலாதனுடைய ஹரி பக்தியை போக்குவதற்கு பல முயற்சிகளை செய்தும் தோல்வியுற்றனர். இதனால் இரண்யகசிபுவின் கோபம் அதிகமாகியது. அரசனின் கட்டளைப்படி சேவகர்கள் பிரகலாதனை உணவு தண்ணீரின்றி இருட்டுச் சிறையில் அடைத்தனர். பிரகலாதன் துன்பத்தையும் பசியையும் பொருட்படுத்தாமல் ஹரி நாமத்தை உச்சரிப்பதிலேயே ஆர்வம் காட்டினான்


உணவினையும் விடுத்து மகனை
நினைத்து வருந்திக்
கொண்டிருக்கும் தாயினை கண்ட
ஹரி, தாயிடம் மகனாகவும்,
பிரகலாதனிடம் தாயாகவும்
வந்து அவர்களின் பசியை
போக்கினார். ஹரி பக்தியை
கைவிடாத பிரகலாதனுக்கு
இரண்யகசிபு தீவிரமான
தண்டனைகளை வழங்கினான்.
ஆயுதங்களால் தண்டித்தும்,
யானையைக் கொண்டு
மிதிக்க வைக்க முயற்சிக்க அது
அவனின் பக்திக்கு அடிபணிந்தது
அம்மா! முதலில் தாங்கள் சாப்பிடுங்கள்
"ஓம் நமோ நாராயணா"
"ஓம் நமோ நாராயணா"
"ஓம் நமோ நாராயணா"
"சேஷசயன நாராயணா"
மலை மீதிருந்து தூக்கி வீசியபோது லக்ஷ்மி நாராயணனாக காப்பாற்றினார். கடலில் எறிந்தபோது மத்ஸ்யமாக வந்து காப்பாற்றி கரை சேர்ப்பித்தார். விஷப் பாம்புகளால் தீண்டிட வைத்தப்போது அவை பூமாலைகளாயின. தீயில் போட்டபோதும் அவனுக்கு அது சுடவே இல்லை. இவையெல்லாம் நிஜம் தானா! என ஆச்சர்யம் உற்ற இரண்யகசிபு விஷம் கொண்டு வந்து பிரகலாதனை அருந்தச் செய்தார். ஆனால் பிரகலாதன் மீண்டும் தன் நிலையை அடைந்து ஹரியை துதித்தார்
"ஓம் நமோ நாராயணா"

அப்பொழுது இரண்யகசிபு, உன்னை இப்பொழுதே என் கதாயுதத்தால் கொன்று விடுகிறேன் என்றான். பிரகலாதன், மரணம் நம் கைகளில் இல்லை. ஹரி என்னைக் காப்பார் என்றான். யார் அந்த ஹரி, எங்குள்ளான் என்றான் இரண்யகசிபு




"ஓம் நமோ நாராயணா" அவர் இல்லையென்ற சந்தேகம் வேண்டாம். ஸ்ரீஹரி எங்கும் வியாபித்துள்ளார்



இரண்டாக பிளக்கப்பட்ட தூணிலிருந்து திகைப்பூட்டும் தேஜஸுடன் அவதரித்த நரசிம்ம ஸ்வாமி, இரண்ய கசிபுவின் வயிற்றை கிழித்து கொன்று பிரகலாதனை காத்தார். தன்னை நம்பியவரை எவ்வேளையிலும் காப்பேன் என்று அருள் புரிந்தார். பிரகலாதன் மீது பூமழை பொழிந்தது

அடுத்த இதழில் மற்றொரு கதையைப் பார்த்து படித்து மகிழ்வோம்!

முற்றும்.



# கடவுள் துணை

– திரு. கே. ராமநாதன்,
சேலம்.

குரு நாமதேவர் சீடன் சைதன்யனிடம், "உன் கல்விப் பயிற்சி நிறைவடைந்து விட்டது. இனி, நீ உன் பெற்றோரிடம் சென்று அவர்களுக்கு உதவி செய். உனக்குக் கடவுள் துணை இருப்பார்" என்று கூறி ஆசி வழங்கினார்.

ஆசி பெற்ற சைதன்யன் தன் குருவிடம், "குருவே, நீங்கள் எனக்குக் கடவுள் துணை இருப்பார் என்றீர்கள். ஆனால், அந்தக் கடவுளை எனக்குக் காட்டவில்லையே?" என்றான். அதற்கு அவர், "உன் சந்தேகத்தை பிறகு போக்குகிறேன். முதலில் அருகில் உள்ள நகரத்தில் வசிக்கும் என் சகோதரனைச் சந்தித்து நலம் அறிந்து வா" என்றார். சைதன்யனும் புறப்பட்டான். அவனுக்கு காட்டில் தண்ணீர் தாகம் ஏற்பட்டது. அப்போது பார்வையற்ற ஒரு முதியவர் இலைகளை முகர்ந்து பார்த்து பறித்துக் கொண்டிருந்ததைக் கண்டான்.

அவன் அவர் அருகே சென்று, "நீங்கள் புதர்களில் என்ன தேடுகிறீர்கள்?" என்றான். அதற்கு முதியவர், "நான் குருடன் எனவே முகர்ந்து பார்த்து மூலிகை இலைகளைப் பறிக்கிறேன். இது பாம்புக்கடி மூலிகை. இதன் சாற்றைப் பிழிந்து வாயில் விட்டால் நஞ்சு நீங்கும். நீயும் கொஞ்சம் மூலிகைகளை வைத்துக் கொள்" என்று கூறி மூலிகை இலைகளைத் தந்தார். அதைப் பெற்றுக் கொண்ட சைதன்யன், "இங்கே குடிக்கத் தண்ணீர் கிடைக்குமா?" என்றான். முதியவர் அருகில் கிணறு இருப்பதைக் காட்ட, அவன் அங்கே சென்று தன் தாகம்

தீர்த்துக் கொண்டான். பிறகு தான் கொண்டு வந்த உணவில் கொஞ்சம் உண்டபின், மரநிழலில் உறங்கினான். அப்போது திடீரென்று முயல் ஒன்று இடித்து விட்டுச் செல்வதை உணர்ந்து கண் திறந்து பார்த்தான்.

அச்சமயத்தில் மரத்தில் ஏதோ சத்தம் கேட்க, பெரிய மரக்கிளை ஒன்று ஒடிந்து கீழே விழுவதைப் பார்த்த அவன் அந்த இடத்தை விட்டு விலகியதால் உயிர் பிழைத்தான். மாலை நேரத்தில் கசாந்த நகரம் வந்த அவன் அங்கே பசியால் வாடிய ஒரு பிச்சைக்காரனுக்கு மீதமிருந்த உணவைக் கொடுத்து விட்டு, அவ்வூரில் இருந்த சத்திரத்தில் சென்று தங்கினான். நடு இரவில் சத்தம் கேட்டு எழுந்த அவன், தன் அருகில் தூங்கிக் கொண்டிருந்தவரை பாம்பு கடித்து விட்டு ஓடுவதையும் கண்டான். உடனே தன்னிடமிருந்த மூலிகை இலைச் சாற்றைப் பிழிந்து பாம்பு கடித்தவரின் வாயில் ஊற்றி உயிர் பிழைக்க வைத்தான். அவர் மாறு வேடத்தில் இருந்த தலைமை அமைச்சராவார். அவர் அவனிடம் தன்னை அரண்மனையில் வந்து சந்திக்குமாறு கூறினார். பின்னர் குருவின் சகோதரனைச் சந்தித்து நலமறிந்தான்.

பிறகு, குருவிடம் வந்தடைந்த அவன், வழியில் நடந்த அனைத்தையும் கூறினான். அதைக்கேட்ட குரு நாமதேவர், “நீ கடவுளைக் கண்டுவிட்டாய்! கடவுள் எப்போதும் எல்லா இடங்களிலும் எல்லா உயிர்களிலும் இருப்பார். காட்டில் உனக்கு மூலிகை தந்து உதவிய குருட்டு முதியவர், கிணறு அமைத்துத்தாகம் தீர்க்க உதவியவன், மரத்தடியில் உதவிய முயலும் கடவுளே. பசியால் வாடிய பிச்சைக்காரனுக்கு உணவு தந்து உதவிய நீ அவனுக்குக் கடவுளே; அமைச்சரின் உயிர் காத்த நீ அவருக்குக் கடவுளே என்றார். மற்றவர்களுக்கு உதவி புரிந்து வாழ்வதே கடவுளின் செயல். அதுவே கடவுளின் உண்மையான வடிவம் என்பதை சைதன்யன் தெளிவாக உணர்ந்தான்.



# சிறந்த சிறுவன்

**சிறுவனின் பெயர்:**
**கலகா அச்யுத் சர்மா**

| | |
|---|---|
| பிறந்த தேதி | – 17–09–2015. |
| படிப்பு | – யு.கே.ஜி. |
| தந்தை பெயர் | – திரு.கே.என்.வி. காமேஸ்வர ராவ், மென்பொருள் தொழில்துறை. |
| தாய் பெயர் | – திருமதி சைலாஜா, மென்பொருள் தொழில்துறை. |

அச்யுத் சர்மா 1.5 வயதிலிருந்தே ஸ்தோத்திரங்களை ஓதத் தொடங்கினார். அவர் யூடியூப்பின் வாயிலாக ஸ்தோத்திரங்களை கேட்டு ஓதி வந்தார். ஸ்தோத்திரங்களின் ஆடியோவைக் கேட்கும் போது ஸ்கிரிப்டைக் கவனிப்பதன் மூலம் தெலுங்கை சுயமாக எழுதவும் கற்றுக்கொண்டார். பல்வேறு ஸ்தோத்திரங்களின் 100 பதிவுகளுடன் ஒரு யூடியூப் சேனலைக் கொண்டுள்ளார்.

அவற்றில் சில :

- **விஷ்ணு சஹஸ்ரநாம ஸ்தோத்திரம்.**
- **லலிதா சஹஸ்ரநாம ஸ்தோத்திரம்.**
- **ஸப்தஸ்லோகி–இராமாயாணம்.**
- **பகவத் கீதை (18 அத்யாயங்கள்).**
- **சிவபுஜங்க ஸ்தோத்திரம்.**

## பெற்ற பரிசுகள் :

- **அதிகமாக ஸ்தோத்திரங்கள் ஓதுவதில் இந்தியா புக் ஆஃப் ரெக்கார்ட்ஸ்**
- **படித்தல், எழுதுதல் பாராயணம் செய்தல் (700 பகவத் கீதை சுலோகங்கள்) இந்தியா புக் ஆஃப் ரெக்கார்ட்ஸ்**

புதிர்

# "வினா-விடை"

1. ஆழ்வார்களால் நான்கு பாசுரங்களால் மங்களாசாசனம் செய்யப்பட்ட திவ்யதேசம் எது?

   அ) திருநீர்மலை ஆ) திருக்கடிகை

   இ)திருவள்ளூர் ஈ) குலசேகராழ்வார்

2. திருஎவ்வுள் திவ்விய தேசத்தில் அமைந்துள்ள விமானத்தின் பெயர் என்ன?

   அ) உத்பலா விமானம் ஆ)ஆனந்த விமானம்

   இ) தோயகிரி விமானம் ஈ) விஜயகோடி விமானம்

3. தயா சதகம் என்னும் நூலை இயற்றியவர் யார்?

   அ) வேதாந்த தேசிகர் ஆ) மணவாள மாமுனி

   இ) ராமாநுஜர் ஈ) அப்பிள்ளை

4. சதுர்த்த ரங்கம் என்று போற்றப்படும் திவ்யதேசம் எது?

   அ) திருக்கச்சி ஆ)திருப்பதி

   இ) திருக்குடந்தை ஈ) திருவரங்கம்

5. பெருமாள் புண்டரீக மஹரிஷிக்கு அருள் செய்த திவ்ய தேசம் எது?

   அ) திருசித்ரகூடம் ஆ)திருமணிக்கூடம்

   இ) திருக்கடல்மல்லை ஈ) திருநாவாய்

6) நாலுகவிப்பெருமாள் என்னும் சிறப்புப் பட்டம் பெற்ற ஆழ்வார் யார்?

   அ) திருப்பாணாழ்வார் ஆ)மதுரகவியாழ்வார்

   இ) நம்மாழ்வார் ஈ) திருமங்கையாழ்வார்

7) பெரியாழ்வாரின் அவதார தலம் எது?

   அ) ஸ்ரீரங்கம் ஆ)திருவைகுண்டம்


   இ) வில்லிபுத்தூர் ஈ) திருவரமங்கை

திரு. என். பாலசுப்பிரமணியன், திருவள்ளூர்.

1) ஆ, 2) ஈ, 3) அ, 4) இ, 5) இ, 6) ஈ, 7) இ

# சித்திரம் வரைதல்

இந்த சித்திரத்திற்கு வண்ணம் தீட்டுவோமா...



மேலே உள்ள படத்தை கீழே உள்ள கட்டத்தில் வரையுங்கள்...



SAPTHAGIRI (TAMIL) ILLUSTRATED MONTHLY Published by Tirumala Tirupati Devasthanams printing on 25-11-2020. Regd. with the Registrar of Newspapers under "RNI" No.10742,
Postal Regd.No.TRP/12 - 2018-2020
Licensed to post without prepayment No.PMGK/RNP/WPP-04/2018-2020

